(7) அரசினர் சட்ட முன்வடிவு.

முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.
என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(8) 1978–79 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து நிதியமைச்சர் அவர்கள் 1978–79 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அவையில் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 60·20 கோடி ரூபாய்க்கும், மூலதன, கடன் கணக்குகளில் 131·88 கோடி ரூபாய்க்கும் ஆக மொத்தமாக 192·08 கோடி ரூபாய்க்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. சென்ற ஆண்டு பெய்த பெரு மழையினால், நீலகிரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்யும் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளுக்காக 3·86 கோடி ரூபாயும், பாசன வசதிகளைச் சீரமைக்க 2.75 கோடி ரூபாயும் இவற்றில் குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகளாகும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக நகராட்சிகளுக்கும் மானியமாக 1·12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.